# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C 34/2017**

**Deposition of Witness for Prosecution : PW11**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணியன் | Caste | : |
| Father/Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( accused absent petition filed and allowed )

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 10.02.2026**

**முதல் விசாரணை** :

நான் தற்போது காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று போடிநாயக்கனூரில் வசிதது வருகிறேன். கடந்த 17.12.2011 அன்று உத்தப்பநாயக்கனூர் கா.நி.கு.எண்.174/2011 இதச பிரிவுகள் 457, 380 ஆக பதிவு செய்யப்பட்ட வழக்கை எனக்கு முன்னிருந்த காவல் ஆய்வாளர் எழுமலை வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பு உசிலம்பட்டி திரு. சிவக்குமார் அவர்களையும், அவர்களது கையொப்பமும் எனக்கு நன்றாக தெரியும், காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்ததில் 22.03.2012ம் தேதி எதிரி ராமர் என்பவரை காவலில் எடுத்து விசாரணை செய்ததில் மேற்படி ராமர் எவ்வித தூண்டுதலும் இன்றி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் அனிதா, பாலகிருஷ்ணன், கதிரேசன், சஞ்சய்

சேட் ஆகியோரை இவ்வழக்கில் குற்றவாளியாக சேர்த்துள்ளார். பின்னர் இவ்வழக்கினை 20.02.2014ம் தேதியன்று எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரி ராமர் மற்றும் அனிதா ஆகியோர் இந்த வழக்கின் திருடிய நகைகள் மூலம் வாங்கிய சொத்துக்களின் பத்திரத்தைக் கைப்பற்றி 03.11.2014ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். இறுதியில் 20.11.2014ம் தேதியன்று புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 1வது எதிரிக்கு 457, 380 இதசப் பிரிவின்படியும், 2வது எதிரிக்கு 457, 380 r/w 34 இதசப்பிரிவுகள் மற்றும் 3, 4 எதிரிகளுக்கு 457, 380 r/w 109 இதச பிரிவின்படியும், 5வது எதிரி 411 இதசப்படியும் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார் எழுத்துமூலமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை 7.30மணிக்கு பிரோவைத் திறந்த போதுதான் நகை திருடு போன விபரம் தெரியவந்தது என்று புகாரில் உள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் எந்த நேரத்தில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வீட்டின் கதவை உடைத்து திருடியதாக சொன்னதற்கு அதுசம்பந்தமான புகைப்படம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 1ம் எதிரியை அழைத்து சென்று 3, 4 எதிரிகளை அடையாளம் காண்பித்து இவர்களிடம் தான் திருடிய நகைகளை விற்றேன் என்று அவர்கள் முன்பாக எதிரிகளை அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

1 மற்றும் 2வது எதிரிகள் திருடிய நகையில் சொத்துக்கள் வாங்கியதாக சொன்னதற்கு சம்பந்தப்பட்ட சார்பதிவாளரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தீர்களா என்றால் இல்லை. வாங்கப்பட்ட நகைகள் திருடிய நகைதான் என்று முடிவு செய்த பின்பு தான் இதச பிரிவு

411ன் கீழ் எதிரிகள் மீது குற்றறிக்கை தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். எனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகள் விசாரணை செய்து வைத்திருந்த கோப்பினை நான் மேல்விசாரணை செய்யாமல் அப்படியே நிலையத்தில் வைத்து கோப்புகளைத் தயார் செய்து எதிரிகள் மீது ஒருதலைபட்சமாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை